# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 9 | குடியியற்கல்வி | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................

**பகுதி I**

**மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. சமூகத்தின் அடிப்படை அலகாக அமைவது.

1. குடும்பம் 2. பாடசாலை 3. தனிநபர் 4. கிராமம்

02. ஐக்கிய அமெரிக்காவில் நிலவிய அடிமை முறையை நீக்குவதற்குப் பாடுபட்டவர்.

1. ஒபாமா 2. ஆபிரகாம்லிங்கன்
3. றொனால்ட்றீகன் 4. ஜோர்ஜ்வாசிங்டன்

03. சமூக இசைவாக்கம் அடைவதற்கான அடிப்படைப் பயிற்சியை வழங்குவது.

1. பாடசாலை 2. வணக்கத்தலம் 3. குடும்பம் 4. சமூகம்

04. "பன்சலையின் பிதா" என அழைக்கப்பட்ட கத்தோலிக்க மதகுரு யார்?

1. வணபிதா ஜோசப்வாஸ் 2. வணபிதா மர்சலின் ஜெயகொடி
3. வண.பிதா இராஜப்பு யோசப் 4. வணபிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்

05. இலங்கையில் தற்போது காணப்படுகின்ற நீதிமன்றங்களுள் அதி உயர்தரத்தில் அமைந்த நீதிமன்றம் எது?

1. நீதவான் நீதிமன்றம் 2. மேன்முறையீட்டு நீதிமன்றம்
3. உச்ச நீதிமன்றம் 4. மேல் நீதிமன்றம்

06. அரசாங்கத்தின் சட்டம் தொடர்பான சகல செயற்பாடுகளுக்கும் பொறுப்பாக இருப்பது.

1. நீதிமன்றங்கள் 2. பொலிஸ்திணைக்களம்
3. நீதி திணைக்களங்கள் 4. சட்டமா அதிபர் திணைக்களம்

07. "சட்டத்தை மதிக்கும் நேர்மையான சமூகமொன்றினை கட்டியெழுப்புதல்" என்ற வாசகத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனம்.

1. பொலிஸ்திணைக்களம்
2. சட்டமா அதிபர் திணைக்களம்
3. அரசாங்க இரசாயன பகுப்பாய்வு திணைக்களம்
4. சிறைச்சாலைத் திணைக்களம்

08. இலங்கை இராணுவப்படை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு.

1. 1950 2. 1949 3. 1951 4. 1948

09. சிறுவர் பாதுகாப்பு மற்றும் துன்புறுத்தல் தொடர்பான தகவல்களைக் கொடுப்பதற்கான நேரடித் தொலைபேசி இலக்கம்.

1. 1990 2 129 3. 119 4. 110



kalvi.lk

10. “சிறுவர்களுக்காக நட்புள்ள பாதுகாப்பான சூழலொன்றைக் கட்டியெழுப்புதல்” என்பது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினது.‘

1. நோக்கக்கூற்று 2. பணிக்கூற்று 3 மகுடவாசகம் 4 வரைவிலக்கணம்

11. மனித உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலம் சமூகப்பாதுகாப்புக்கான பெரும் பணியை ஆற்றி வருகின்ற அமைப்பு.

1. இலங்கை பாதுகாப்புப்படை 2. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
3. சட்டமா அதிபர் திணைக்களம் 4. நீதிமன்றங்கள்

12. மக்களுக்கு ஏற்படும் சிறு பிணக்குகளை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லாமல் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பு,

1. கிராமசபை 2. இணக்கசபை 3. பிரதேசசபை 4. அறிஞர்சபை

13. “பாதுகாப்பு விடயங்களை அறியாதவர்கள் உலகை அறியார் என்ற கவிதைவரி மூலம் தொழில் நுட்பத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியவர்.

1 குமாரதுங்க முனிதாச 2. முனிதா குமாரதுங்க
3. ஜோசெப் பெரேரோ 4. மககமசேகர

14. பொருளாதார முறையொன்றில் நிலவும் மனிதர்களது தேவைகளை நிறைவு செய்யும் வகையில் கிடைக்கும் வளங்களை பொருட்களாக மாற்றியமைக்கும் செயன்முறை குறித்து நிற்பது.

1. அபிவிருத்தி 2. கைத்தொழில் 3. உற்பத்தி 4. தொழில்நுட்பம்

15. நாட்டின் பொருளாதாரத்தில் ஏனையதுறைகளை விட தற்காலத்தில் முன்னனி வகித்துவரும் துறையாக விளங்குவது.

1. வர்த்தகத்துறை 2. சேவைத்துறை 3. கைத்தொழில்துறை 4. விவசாயத்துறை

16. முற்காலத்தில் மனிதர்கள் தொலைவில் உள்ள ஒருவருக்கு செய்திகளை அனுப்பப் பயன்படுத்திய முறைகளுள் ஒன்று அல்லாதது.

1. தீமூட்டல் 2. புறாமூலம் 3. தொலைநகல் 4 அம்புவில்

17. மனிதர்கள் தமது நடவடிக்கைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகப் பயன்படுத்தும் வழிமுறைகளைக் குறித்து நிற்பது.

1. கண்டுபிடிப்புக்கள் 2. தொழில்நுட்பம் 3. அபிவிருத்தி 4. கைத்தொழில்

18. விஞ்ஞானபூர்வ முறைகளைப் பின்பற்றி பிரச்சினையொன்று தொடர்பான தீர்வினைத் தேடுகின்ற செயல்முறை குறிப்பது.

1. சிந்தனை 2. புத்தாக்கம் 3 ஆராய்ச்சி 4 அபிவிருத்தி

19. உலகில் கைத்தொழில் புரட்சி பரவலடைந்த காலப்பகுதியாக கருதப்படுவது.

1. 1750 – 1850 2. 1600 – 1700 3. 1800 – 1900 4. 1550 - 1650

20. பொருளாதார மாற்றங்கள் தனிநபர் மற்றும் சமூகத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கம் அல்லாதது

1. சுற்றாடல் மாசடைதல் 2. நோயற்ற வாழ்வு ஏற்படுதல்
3. இயந்திரமயமாதல் 4. நகரமயமாக்கல் ஏற்படுதல்

(2 x 20 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

(01) 1. சமூகப் பாதுகாப்பின் முக்கியத்துவம் இரண்டு தருக?

2. "சமூகப்பாதுகாப்பு" முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அபிவிருத்தி வகைகள் இரண்டு தருக?

3. அனைத்து சமூகங்களிடையேயும் காணக்கூடிய பொதுப்பண்புகள் இரண்டு தருக?

4. குடும்ப வகைகள் இரண்டையும் குறிப்பிடுக

5. புதிய கண்டுபிடிப்புக்கள் உருவாவதற்குரிய காரணங்கள் இரண்டு தருக?

6. பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய செயற்பாடுகள் எத்தனை வகைப்படும்? அவை எவை?

( 6 x 2 = 12 புள்ளிகள்)

(02) 1. சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நிறுவனங்கள் மூன்று தருக?

2. சமூகத்தை அடையாளப்படுத்தும் காரணிகள் நான்கு தருக?

3. சமூகப்பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு குடும்பத்தினால் ஆற்றப்படும் பணிகள் ஐந்து தருக?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(03) 1. சட்டத்தின் வகைகள் எத்தனை வகைப்படும்? சட்டத்தின் வகைகளைக் குறிப்பிடுக?

2. சட்டத்தை அமுல்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் 4 தருக?

3. சட்டமா அதிபர் திணைக்களத்தின் பணிகள் ஐந்து தருக?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(04) 1. பாதுகாப்பு அமைச்சினால் நெறிப்படுத்தப்படுகின்ற படைகள் எவை?

2. இலங்கை இராணுவப்படை எப்போது ஸ்ரீலங்கா இராணுவப்படை எனப் பெயர்மாற்றம் பெற்றது? அதன் மகுடவாசம் யாது?

3. a. கடற்படையினரின் முக்கிய பணிகள் மூன்று தருக?

b. பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்படும் பணிகள் மூன்று தருக?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)



kalvi.lk

(05) 1. நீதிமன்றம் தொடர்பான தனிநபர் பொறுப்புக்களும் கடமைகளும் 3 தருக?

2. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மூலம் ஆற்றப்படுகின்ற சேவைகள் 4 தருக.

3. மனித உரிமை ஆணைக்குழு தொடர்பான தனிநபர் பொறுப்புக்களும் கடமைகளும் 5 தருக?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(06) 1. பேண்தகு தொழில்நுட்பம் என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்துக?

2. பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கின்ற பயன்கள் நான்கு தருக?

3. பொருளாதாரத்துறையில் ஏற்படுகின்ற மாற்றங்களை பிரதானமாக எத்தனை துறைகளின் கீழ் நோக்கலாம்? அவற்றைக் குறிப்பிட்டு ஒன்றை விளக்குக?

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

### எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினுடாக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page